சென்னை விமான நிலையத்தில் பயணிகள் உடைமைகளில் வண்ண ரிப்பன் கட்ட அறிவுறுத்தல்

மாற்றி எடுத்துச் செல்வதைத் தடுக்க நடவடிக்கை

சென்னை, ஜூன் 5: விமான நிலையங்களில் பயணிகள் சூட்கேஸ்களை தவறுதலாக மாற்றி எடுத்துச் செல்லும் சம்பவங்கள் அதிகரித்து வருவதால், உடைமைகளை எளிதில் அடையாளம் காணும் வகையில் வண்ண ரிப்பன் அல்லது தனித்துவ அடையாளங்களைப் பொருத்துமாறு இந்திய விமான நிலைய ஆணையம் அறிவுறுத்தியுள்ளது.

சென்னை உள்ளிட்ட நாட்டின் பல்வேறு விமான நிலையங்களில், பயணிகள் பயணத்தை முடித்து கன்வேயர் பெல்ட்டில் வரும் உடைமைகளை பெறும்போது, ஒரே மாதிரியான வடிவம் மற்றும் நிறத்தில் உள்ள சூட்கேஸ்களை தவறுதலாக எடுத்துச் செல்லும் நிகழ்வுகள் தொடர்ச்சியாக பதிவாகி வருவதாகக் கூறப்படுகிறது.

பொதுவாக விமான நிறுவனங்கள் ஒவ்வொரு பயணியின் உடைமைக்கும் தனித்த அடையாள டேக் வழங்கி, அதற்கான எண்ணை போர்டிங் பாஸிலும் பதிவு செய்கின்றனர். இருப்பினும், அவசரம் மற்றும் கவனக்குறைவு காரணமாக சிலர் டேக் எண்ணை சரிபார்க்காமல் சூட்கேஸ்களை எடுத்துச் செல்வதால் குழப்பங்கள் ஏற்பட்டு விடுகின்றன. இதன் காரணமாக பயணிகள் இடையே வாக்குவாதம் மற்றும் உடைமைகளை மீட்டெடுப்பதில் தாமதம் போன்ற சிக்கல்கள் உருவாகி வருகின்றன.

இந்த பிரச்னைக்கு தீர்வாக, பயணிகள் தங்களது சூட்கேஸ்களின் கைப்பிடி அல்லது மேற்பகுதியில் வண்ணமயமான ரிப்பன், தனித்துவமான ஸ்டிக்கர் அல்லது எளிதில் அடையாளம் காணக்கூடிய குறியீடுகளைப் பொருத்திக் கொள்ளுமாறு இந்திய விமான நிலைய ஆணையம் பரிந்துரைத்துள்ளது.

இதேபோல், சென்னை விமான நிலையத்தில் கன்வேயர் பெல்ட்டை சுற்றி ட்ராலிகளுடன் பயணிகள் கூட்டமாக நிற்பதும் மற்றொரு சிக்கலாக உள்ளதாக கூறப்படுகிறது. இதனால், சிலர் தங்களது உடைமைகளை உடனடியாக எடுக்க முடியாமல், அவை மீண்டும் பெல்ட்டை சுற்றி வரும் வரை காத்திருக்க வேண்டிய நிலை ஏற்படுகிறது.

எனவே, வெளிநாட்டு விமான நிலையங்களில் நடைமுறையில் இருப்பதைப் போல, பயணிகள் கன்வேயர் பெல்ட்டிலிருந்து சற்று விலகி காத்திருந்து, தங்களது உடைமை வந்த பின்னர் மட்டும் முன்னேறிச் சென்று எடுத்துக்கொள்ளும் ஒழுங்குமுறையை சென்னை உள்ளிட்ட விமான நிலையங்களில் அமல்படுத்த வேண்டும் என்ற கோரிக்கையும் பயணிகள் மத்தியில் எழுந்துள்ளது.

உலகுக்கு வழிகாட்டும் விஸ்வ குருவாக திகழ்கிறது இந்தியா

ஆரோவில் விழாவில் ஆளுநர் ஆர்லேகர் பெருமிதம்

விழுப்புரம் மாவட்டம், ஆரோவில் சர்வதேச நகரில் ஆரோவில்வாசிகளுக்கு அடையாள அட்டைகளை வழங்கிய தமிழக ஆளுநரும், ஆரோவில் அறக்கட்டளை நிர்வாகக் குழுத் தலைவருமான ஆர்.வி.ஆர்லேகர். உடன் ஆரோவில் அறக்கட்டளைச் செயலரும், குஜராத் மாநில கூடுதல் தலைமைச் செயலருமான ஜெயந்தி எஸ்.ரவி, ஆரோவில் அறக்கட்டளை சிறப்பு செயல் அதிகாரி ஜி.சீத்தாராமன் உள்ளிட்டோர்.

விழுப்புரம், ஜூன் 5: உலகுக்கு வழிகாட்டும் விஸ்வகுருவாக இந்தியா திகழ்கிறது என்று தமிழக ஆளுநரும், ஆரோவில் அறக்கட்டளை நிர்வாகக் குழுத் தலைவருமான ஆர்.வி.ஆர்லேகர் தெரிவித்தார்.

விழுப்புரம் மாவட்டம், ஆரோவில் சர்வதேச நகருக்கு தமிழக ஆளுநர் ஆர்லேகர் வெள்ளிக்கிழமை வந்தார். அவருக்கு ஆரோவில் அறக்கட்டளைச் செயலரும், குஜராத் மாநில கூடுதல் தலைமைச் செயலருமான ஜெயந்தி எஸ்.ரவி மற்றும் அறக்கட்டளை நிர்வாகக் குழுவினர் வரவேற்பளித்தனர்.

இதைத் தொடர்ந்து, அங்குள்ள பாரத் நிவாஸில் நடைபெற்ற ஆரோவில் சர்வதேச நகரில் நடைபெறும் வளர்ச்சிப் பணிகள் குறித்த புகைப்படக் கண்காட்சியைப் பார்வையிட்ட அவர், மாத்திர் மந்திருக்குச் சென்று தியானம் மேற்கொண்டார்.

பின்னர், யுனிட்டி பெவிலியனுக்குச் சென்ற ஆளுநர் ஆர்லேகர் ஆரோவில் சர்வதேச நகரின் வளர்ச்சிப் பணிக் குழுவினரை சந்தித்துப் பேசினார். அப்போது, ஆரோவில் சர்வதேச நகரில் நடைபெற்று வரும் வளர்ச்சித் திட்டப் பணிகள், அதன் முன்னேற்றங்கள் குறித்து கேட்டறிந்தார்.

பின்னர், அங்கு குழுமிருந்த ஆரோவில் வாசிகளுடன் கலந்துரையாடினார். முன்னதாக, ஆரோவில் வளர்ச்சிப் பணிக் குழுவினருக்கு அடையாள அட்டைகளை வழங்கினார்.

இதைத் தொடர்ந்து, ஆளுநர் ஆர்லேகர் பேசியதாவது: ஆரோவில் சர்வதேச நகரில் மகான் ஸ்ரீ அரவிந்தரும், அன்னையும் (மிர்ரா அல்பாசா) நம்மைச் சுற்றி இருப்பதையும், ஆசிர்வதிப்பதையும் நம்மால் உணர முடிகிறது.

இத்தருணத்தில் நாம் 'ஆரியர்' என்ற வார்த்தையை தவறாகப் புரிந்துகொள்ளக் கூடாது. ஆரியர் என்பது ஓர் இனம் அல்ல; இது, ஒரு குணம். இந்திய மக்களிடையே உள்ள இந்த நற்குணம் உலகிலுள்ள மனிதர்களையும் சென்றடைய வேண்டும். அவ்வாறு சென்றடைந்தால், அது உலகத்தை மகிழ்வுக்கு உள்ளாக்கும். இந்தக் கோட்பாட்டைத் தான் அன்னை நமக்குக் கற்பித்தார்.

அவருடைய கனவுகள் எல்லாம் மகான் அரவிந்தரின் கனவுகளைப் போலவே இருந்தன. அடுத்துவரும் 100 ஆண்டுகளில் நம் பாரதம் (இந்தியா) இந்த முழு உலகுக்கும் வழிகாட்டும் என்று ஸ்ரீ அரவிந்தர் கணித்தார். அவருடைய கணிப்பு தற்போது நிஜமாகி வருகிறது. முழு உலகமும் நம்மை உற்றுநோக்கிக் கொண்டிருக்கிறது.

காலனித்துவ மனப்பான்மைகளை விடுத்து, பண்பாடு சார்ந்த உண்மையான கல்வியை அளிப்பதில் நம் நாடு உலகுக்கு வழிகாட்டும் விஸ்வகுருவாகத் திகழ்கிறது.

இங்கே மதம் இல்லை எனவும், பாதுகாக்கப்பட வேண்டியது மனிதநேயம் மட்டுமே என்றும் அன்னை கூறியுள்ளார். அந்த மனிதநேயம் இந்த புனித மண்ணிலிருந்துதான் கற்பிக்கப்பட்டு பரப்பப்படுகிறது.

இங்கே எதிர்மறை எண்ணங்கள் இல்லை. எந்தவொரு நபரும் சிறிது நேரத்தில் இங்கிருந்து நேர்மறை எண்ணங்களை மட்டுமே எடுத்துக்கொள்வார்கள். உலகில் நேர்மறை எண்ணங்களை பரப்புவதற்கு கல்வித் துறையே சிறந்த களம். ஒருங்கிணைந்த கல்வியை அளிப்பதில் ஆரோவில் பள்ளிகள் முன்மாதிரியாக உள்ளன என்றார் ஆளுநர் ஆர்.வி. ஆர்லேகர்.

ஆரோவில் அறக்கட்டளைச் செயலர் ஜெயந்தி எஸ். ரவி ஆரோவில் சர்வதேச நகரின் வளர்ச்சித் திட்டப் பணிகள் மற்றும் கட்டுமானப் பணிகள் குறித்துப் பேசினார்.

இதைத் தொடர்ந்து, அங்கு மரக்கன்றுகளை நட்ட ஆளுநர் ஆர்லேகர், புதிய கட்டடம் (பிளாசா) கட்டுவதற்காக அடிக்கல் நாட்டினார்.

புதுச்சேரி துணைநிலை ஆளுநரின் செயலர் டி.மணிகண்டன், ஆரோவில் சிறப்பு செயல் அதிகாரி ஜி.சீத்தாராமன், நிர்வாகக் குழுவைச் சேர்ந்த ஜெயா, ஆரோவில் வளர்ச்சிப் பணிக் குழுவினர் கலந்துகொண்டனர்.

கல்பனா சாவ்லா விருது: ஜூன் 19-க்குள் விண்ணப்பிக்கலாம்

சென்னை, ஜூன் 5: சென்னை மாவட்டத்தில் கல்பனா சாவ்லா விருது பெற தகுதியானோர், ஜூன் 19- ஆம் தேதிக்குள் இணையதளத்தில் விண்ணப்பிக்கலாம்.

இது குறித்து சென்னை மாவட்ட ஆட்சியர் எஸ்.மாலதி ஹெலன் வெளியிட்ட செய்திக்குறிப்பு:

தமிழக அரசின் சமூகநலன் மற்றும் மகளிர் உரிமைத்துறை சார்பில், தமிழ் நாட்டைச் சேர்ந்த துணிச்சலான, வீர சாகச செயல்புரிந்த பெண்களுக்கு துணிவு மற்றும் வீரதீர செயலுக்கான 'கல்பனா சாவ்லா விருது' வழங்கப்படுகிறது.

தேர்வு செய்யப்படும் விருதாளருக்கு விருதுக்கான பதக்கத்துடன் ரூ.5 லட்சத்துக்கான காசோலை மற்றும் பாராட்டுச் சான்றிதழ் 2026 ஆம் ஆண்டு சுதந்திர தினவிழாவின் போது முதல்வரால் வழங்கப்படும்.

விருதுக்கு விண்ணப்பிக்க விரும்பும் தகுதியானோர் https://www.awards.tn.gov.in எனும் இணைய தளத்தில் ஜூன் 19-ஆம் தேதிக்குள் விண்ணப்பிக்கலாம். மேலும், விண்ணப்பித்த நகலுடன் சென்னை மாவட்ட சமூக நல அலுவலகத்தை நேரில் அணுகி, விருதுக்கான விண்ணப்பப் படிவத்துடன் துணிச்சலான, வீர சாகச செயல் புரிந்தமை குறித்த புகைப்படங்கள், பத்திரிகை செய்திக் குறிப்புகளுடன் கூடிய ஆவணங்களை தமிழ், ஆங்கில மொழிகளில் தனித்தனியே 3 செட்கையேடுகளை தயாரித்து ஜூன் 22 மாலை 5 மணிக்குள் 'சென்னை மாவட்ட சமூக நல அலுவலகம், சிங்காரவேலர் மாளிகை, 8-ஆவது தளம், மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகம், சென்னை' என்ற முகவரியில் நேரில் சமர்ப்பிக்க வேண்டும் எனத் தெரிவித்துள்ளார்.

Canara Bank கனரா வங்கி

சொத்து மீட்பு மேலாண்மை கிளை-I
எண். 524, 8வது தளம், கனரா டவர்ஸ், அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை-600018. போன்: 2849 6339/6900
e-mail id cb2361@canarabank.com, Website: www.canarabank.com

மின் ஏல விற்பனை அறிவிப்பு

கடனீட்டு சொத்துக்களை ரொக்கமாக்குதல் நிதி சொத்துக்களை மறுசீரமைத்தல் சட்டம் 2002 மற்றும் பிணைகாப்பு நிதி சொத்துக்கள் அமலாக்க சட்டம் 2002-ன் கீழ் உள்ள விதி எண். 8 (6)-ன் பிரிவு நிபந்தனைகளின்படி அசையா சொத்துக்களை விற்பனை செய்வதற்கான மின்ஏல விற்பனை அறிவிப்பு.

பொதுமக்களுக்கு பொதுவாகவும், கடன்தாரர்கள் மற்றும் ஜாமீன்தாரர்களுக்கு குறிப்பாகவும் இதன் மூலம் அறிவிப்பது யாதெனில் அடமானம் வைத்துள்ள அசையா சொத்துக்கள் மற்றும் கடன் வழங்கிய வங்கிக்கு கடனுக்காக ஈடு செய்யப்பட்டுள்ள அசையா சொத்துக்களை **தேனாம்பேட்டை கிளை-ன்** அதிகாரபூர்வ அதிகாரியால் **சுவாதீனம்** செய்யப்பட்ட சொத்துக்களை **சொத்து மீட்பு மேலாண்மை கிளை-I**, சென்னை-க்கு மாற்றப்பட்டதிலிருந்து கனரா வங்கி சொத்து மீட்பு மேலாண்மை கிளை-I க்கு செலுத்த வேண்டிய **30.04.2026** அன்று வரை **ரூ.1,06,63,935.84 (ரூபாய் ஒரு கோடியே ஆறு லட்சத்து அறுபத்து மூன்றாயிரத்து தொள்ளாயிரத்து முப்பத்து ஐந்து மற்றும் பைசா எண்பத்து நான்கு மட்டும்)** மேலும் வட்டி மற்றும் வங்கியால் ஏற்படக்கூடிய அதற்குண்டான பிறக்கட்டணங்கள் சேர்த்து **M/s. சத்தியவேதா எண்டர்பிரைசஸ்,** தனர தளம், மனை எண்.49, கிருஷ்ணா நகர், கிராண்ட்லைன், சென்னை - 600 052, **சாந்தினி MP** மனை எண்.27, செவன் ஹில்ஸ் நகர், CC மெஜஸ்டிக் பில்டிங் அடுத்து, குன்றத்தூர், காஞ்சிபுரம், தமிழ்நாடு - 600 069 ஆகியோர்களிடமிருந்து வருவிக்கும் பொருட்டு அசையா சொத்துக்களை **"உள்ளது உள்ளபடி" "உள்ளது உள்ளவாறு மற்றும் உள்ள இடத்தில் உள்ளவாறு"** என்ற அடிப்படையில் **25.06.2026** அன்று (காலை 10.30 மணி முதல் 11.30 வரை) (ஒவ்வொரு 5 நிமிடத்திற்கும் விற்பனை முடியும் வரை கால அளவு நீட்டிக்கப்படும்.) விற்பனை செய்யப்பட உள்ளது என்று இந்த அறிவிப்பு வழங்கப்படுகிறது.

அசையா சொத்துக்களின் விவரங்கள் : CERSAI ID: 400064744051: தென் சென்னை பதிவு மாவட்டம் மற்றும் படப்பை துணை பதிவு மாவட்டத்திற்குட்பட்ட காஞ்சிபுரம் மாவட்டம், ஸ்ரீபெரும்புதூர் தாலுகா, தற்போது குன்றத்தூர் தாலுகா, பழைய எண்.111, புதிய எண்.62, வரதராஜபுரம் கிராமம், DDTP எண்.254/1973-ன்படி அங்கீகாரம் பெற்ற **"வேளாங்கன்னி நகர்"** என்ற பெயர் கொண்ட மனை பிரிவில் சர்வே எண்.528/2, பட்டா எண்.15459 பட்டாவின்படி துணை பிரிவு சர்வே எண்.528/61-ன்படி **மனை எண்.6**-ல் உள்ள **3200 சதுர அடி** காலி குடியிருப்பு இடம். மேலும் அதனுடன் இணைந்த அனைத்து துண்டுகளும் பகுதிகளும் மற்றும் **எல்லைகள்:** வடக்கில்: மனை எண்.5, தெற்கில்: மனை எண்.7, கிழக்கில்: மனை எண். 35, மேற்கில்: 60 அடி சாலை, **அளவுகள்:** வடக்கு பகுதியில்: 80 அடி, தெற்கு பகுதியில்: 80 அடி, கிழக்கு பகுதியில்: 40 அடி, மேற்கு பகுதியில்: 40 அடி. இந்த சொத்து குன்றத்தூர் பஞ்சாயத்து யூனியன் எல்லைக்குட்பட்டது.

குறைந்த பட்ச விலை : ரூ.64,00,000/- | டோணித்தொகை : ரூ.6,40,000/- | ஏல உயர்வு தொகை : ரூ.1,00,000/-

மின் ஏல தேதி / நேரம் : 25.06.2026
அன்று காலை 10.30 மணி முதல் 11.30 மணி வரை
ஒவ்வொரு 5 நிமிடத்திற்கும் விற்பனை முடியும் வரை கால அளவு நீட்டிக்கப்படும்.

சொத்துக்களை பார்வையிடும் தேதி மற்றும் நேரம் : 20.06.2026 அன்று காலை 11.00 மணி முதல் மாலை 4.00 மணி வரை

டோணி தொகை செலுத்த கடைசி தேதி : குறைந்த பட்ச விலையில் 10% டோணி தொகையை **M/s.PSB அலையன்ஸ் பிரைவேட் லிமிடெட்-ன் E-wallet (BAANKNET)** என்ற போர்டலில் நேரடியாகவோ அல்லது டோணி தொகையை **Challan** எடுத்து **RTGS / NEFT** முறையாக Challan-ல் குறிப்பிட்டுள்ள கணக்கு விவரத்தில் **24/06/2026 அன்று அல்லது அதற்கு முன்பு மாலை 5.00 மணி வரை** செலுத்த வேண்டும்.

மின் ஏலம் பற்றிய விரிவான விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளுக்கு கனரா வங்கியின் வலைதளத்தில் (www.canarabank.com) "E-Auction" இணையப்பில் தெரிந்து கொள்ளவும் அல்லது கனரா வங்கி, சொத்து மீட்பு மேலாண்மை கிளை I, சென்னை (தொலைபேசி எண்.044-2849 6339 / 2849 6900), cb2361@canarabank.com என்ற மின் அஞ்சலில் வேலை நேரத்தில் தொடர்பு கொள்ளவும் அல்லது ஏல சேவை வழங்குநரின் விவரங்கள்: Baanknet (M/s PSB Alliance Pvt. Ltd), (Contact No. 7046612345 / 6354910172/ 8291220220/ 9892219848 / 8160205051, மின்னஞ்சல்: support.baanknet@psballiance.com/ support.baanknet@procure247.com).
மின் ஏல போர்டல்: https://baanknet.com

இந்த சொத்து வங்கியின் அடையாளபூர்வ சுவாதீனத்தில் எடுத்துக் கொள்ளப்பட்டது மற்றும் ஏல கொள்முதல்தாரர் நிலையான விற்பனை விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளுடன் கூடுதலாக பின்வரும் விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளுக்கு உட்பட வேண்டும்.
1. சொத்து அடையாளபூர்வ சுவாதீனத்தில் உள்ளது மற்றும் ஏல கொள்முதல்தாரர் தனது சொந்த முயற்சியிலேயே மற்றும் பொறுப்பில் சொத்தை கொள்முதல் செய்ய வேண்டும். 2. அசல் சுவாதீனத்தை ஒப்படைப்பதற்கு வங்கி பொறுப்பேற்காது. 3. வெற்றி பெற்ற ஏல கொள்முதல்தாரர் எந்தவொரு சந்தர்ப்பத்திலும் எந்தவொரு உரிமை கோருவதற்கு உரிமை இல்லை. 4. வெற்றி பெற்ற ஏல கொள்முதல்தாரர் மின்-ஏலத்திற்கு பிறகு மேற்கண்ட விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளில் குறிப்பிட்டுள்ள மேற்கூறிய விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளை (1 முதல் 3 வரை) உறுதிப்படுத்தும் உறுதிமொழி உடன்படிக்கையை உடனடியாக சமர்ப்பிக்கப்பட வேண்டும். 5. விற்பனைக்குப் பிறகு, வெற்றி பெற்ற ஏல கொள்முதல்தாரர் பிரகடனத்தையும் ஒப்பந்தத்தை சமர்ப்பிக்கத் தவறினால் ஏல முன்வைப்பு தொகை பறிமுதல் செய்யப்படும்.

தேதி : 04.06.2026 அதிகாரப்பூர்வ அதிகாரி,
இடம்: சென்னை கனரா வங்கி

Canara Bank கனரா வங்கி

சிறப்பு சொத்து மீட்பு மேலாண்மை கிளை-II, சென்னை
எண். 9 & 10, சர் தியாகராய சாலை, தியாகராய நகர், சென்னை - 600 017.
மொபைல்: 97401 45622, E-mail id: cb7901@canarabank.com

மின் ஏல விற்பனை அறிவிப்பு

கடனீட்டு சொத்துக்களை ரொக்கமாக்குதல் நிதி சொத்துக்களை மறுசீரமைத்தல் சட்டம் 2002 மற்றும் பிணைகாப்பு நிதி சொத்துக்கள் அமலாக்க சட்டம் 2002-ன் கீழ் உள்ள விதி 8(6)-ன் நிபந்தனைகளின் படி அசையா சொத்துக்களை விற்பனை செய்வதற்கான மின் ஏல விற்பனை அறிவிப்பு.

பொதுமக்களுக்கு பொதுவாகவும், கடன்தாரர்கள் மற்றும் ஜாமீன்தாரர்களுக்கு குறிப்பாகவும் இதன் மூலம் அறிவிப்பது யாதெனில் கடன் வழங்கிய வங்கிக்கு கடனுக்கு ஈடாக கீழே விரிவாக குறிப்பிட்டுள்ள அடமானம் செய்யப்பட்டுள்ள அசையா சொத்துக்களை கனரா வங்கியின் **சிறப்பு ARM II கிளை-ன்** அதிகாரபூர்வ அதிகாரியால் **அடையாளபூர்வ சுவாதீனம்** செய்யப்பட்ட சொத்துக்களை **கனரா வங்கி சிறப்பு ARM II கிளைக்கு** செலுத்த வேண்டிய **26/05/2026** அன்று வரை உள்ள கடன் பாக்கித் தொகையான **ரூ.46,17,147.69 (ரூபாய் நாற்பத்து ஆறு இலட்சத்து பதினேழாயிரத்து நூற்று நாற்பத்து ஏழு மற்றும் பைசா அறுபத்து ஒன்பது மட்டும்) திரு.ஜெகன்நாதன்.A (கடன்தாரர் மற்றும் அடமானதாரர்)** க/பெ. ஆறுமுகம், & **திருமதி.ஏஞ்சல் (இணை கடன்தாரர் மற்றும் அடமானதாரர்)** க/பெ. ஜெகன்நாதன், **இருவரின் முகவரி:** எண்.7, மூவேந்தர் குறுக்கு தெரு, ராஜீவ் காந்தி நகர், கலைஞர் கருணாநிதி நகர், சென்னை, தமிழ்நாடு - 600 078 போன். 91-98414 67550 ஆகியோர்களிடமிருந்து வருவிக்கும் பொருட்டு அசையா சொத்துக்களை **"உள்ளது உள்ளபடி" "உள்ளது உள்ளவாறு மற்றும் உள்ள இடத்தில் உள்ளவாறு"** என்ற அடிப்படையில் **25/06/2026 அன்று (காலை 11.00 மணி முதல் நண்பகல் 12.00 வரை)** (ஒவ்வொரு 5 நிமிடத்திற்கும் விற்பனை முடியும் வரை கால அளவு நீட்டிக்கப்படும்.) விற்பனை செய்யப்பட உள்ளது என்று இந்த அறிவிப்பு வழங்கப்படுகிறது.

அசையா சொத்துக்களின் விபரம் விழுப்புரம் மாவட்டம், மரக்காணம் தாலுகா, கூனிமேடு கிராமம், பழைய சர்வே எண்.544/7 மற்றும் புதிய சர்வே எண்.98/6-ன்படி 0.49.5 ஏர்ஸ் மற்றும் பழைய சர்வே எண்.549/3, புதிய சர்வே எண்.97/11-ன்படி 0.09.5 ஏர்ஸ், இதில் மனை எண்.19-ல் உள்ள நிலம் மற்றும் கட்டிடம். 15.09.2021 தேதிபிட்ட அரும்பை இஞ்சினியரிங் கன்சல்டன்ட்ஸ் மதிப்பீடு அறிக்கையின்படி **மொத்தப் பரப்பளவு: 1250 சதுர அடி.**
விழுப்புரம் மாவட்டம், மரக்காணம் தாலுகா, கூனிமேடு கிராமம், பழைய சர்வே எண்.544/7, புதிய சர்வே எண்.98/6-ன்படி 0.49.5 ஏர்ஸ், தற்போது துணை பிரிவு எண்.98/6A-ன்படி 0.43.10 ஏர்ஸ் மற்றும் பழைய சர்வே எண்.549/3 மற்றும் புதிய சர்வே எண்.97/11-ன்படி 0.09.5 ஏர்ஸ் இதில் மனை எண்.19க்கான **எல்லைகள் மற்றும் அளவுகள்:** கிழக்கில்: பூங்கா, **அளவு:** 50 அடி, மேற்கில்: மனை எண்.18, **அளவு:** 50 அடி, வடக்கில்: 15 அடி சாலை, **அளவு:** 25 அடி, தெற்கில்: மனை எண்.22, **அளவு:** 25 அடி.

குறைந்த பட்ச விலை : ரூ.19,11,400/- | டோணித்தொகை : ரூ.1,91,140/- | ஏல உயர்வு தொகை : ரூ.25,000/-

மின் ஏல தேதி / நேரம் : 25.06.2026 அன்று காலை 11.00 மணி முதல் நண்பகல் 12.00 மணி வரை
(ஒவ்வொரு 5 நிமிடத்திற்கும் விற்பனை முடியும் வரை கால அளவு நீட்டிக்கப்படும்.)

சொத்துக்கள் பார்வையிடும் தேதி & நேரம் : 15.06.2026 அன்று காலை 11.00 மணி முதல் மாலை 4.00 மணி வரை

டோணி தொகை செலுத்த கடைசி தேதி : விருப்பமுள்ள விலைதருகிட்டாளர்கள் குறைந்த பட்ச விலையில் 10% டோணி தொகையை M/s.PSB அலையன்ஸ் பிரைவேட் லிமிடெட்-ன் E-wallet (BAANKNET) என்ற போர்டலில் நேரடியாக **24.06.2026 அன்று அல்லது அதற்கு முன்பு இரவு 10.00 மணிக்குள்** செலுத்த வேண்டும்.

மின் ஏலம் பற்றிய விரிவான விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளுக்கு கனரா வங்கியின் வலைதளத்தில் (www.canarabank.com) "E-Auction" இணையப்பில் தெரிந்து கொள்ளவும் அல்லது கனரா வங்கி, **சென்னை சிறப்பு ARM கிளை - II,** சென்னை, எண்.9 & 10, சர் தியாகராய சாலை, தியாகராய நகர், சென்னை - 600 017 என்ற முகவரியிலும், மொபைல் எண்.9740145622 என்ற எண்ணிலும் பின்னஞ்சல்: cb7901@canarabank.com என்ற மின் அஞ்சல் முகவரிகளோ அலுவலக நாட்களில் அலுவலக நேரத்தில் தொடர்பு கொள்ளவும்.
மின் ஏல போர்டல்: https://baanknet.com

தேதி : 03.06.2026 அதிகாரப்பூர்வ அதிகாரி,
இடம்: சென்னை கனரா வங்கி

இந்தியன் வங்கி இந்தியன் வங்கி

மதுரவாயல் கிளை
எண்.4, A1 & A2, MMDA காலனி, முதல் மெயின் ரோடு, மதுரவாயல், சென்னை - 95. தொலைபேசி : 044-2378 1425.
மின்னஞ்சல் : maduravoyal@indianbank.bank.in

கோரிக்கை அறிவிப்பு வெளியீடு

2002-ம் ஆண்டு கடனீட்டுச் சொத்துக்களை ரொக்கமாக்குதல், நிதி சொத்துக்களை சீரமைத்தல் மற்றும் கடனீட்டுச் சொத்துக்கள் மீதான உரிமை அமலாக்கச் சட்டப்பிரிவு 13(2)-ன் கீழ் அறிவிப்பு 05.05.2026 அன்று ஒப்புகையுடன் கூடிய பதிவுத்தபால் மூலம் அனுப்பப்பட்டது.
பெறுநர், (1) M/s. உத்தரா யுனைடெட், (கடன்தாரர்), பதிவு செய்யப்பட்ட அலுவலக முகவரி : 2வது தளம், P. எண்.21 & 22, காளியம்மன் சாலை, S K நகர், செட்டியார் அகரம், காரம்பாக்கம், திருவள்ளூர், தமிழ்நாடு - 600 077, **மேலும் இருப்பது :** சர்வே எண்.11, 24/2, மோகிலி கிராமம், பங்காருபாலம் மண்டலம், சித்தூர், ஆந்திர பிரதேசம் - 517 416. **(2) திருமதி. சம்மன்னா ஹரநாத் சசிகலா, (பங்குதாரர் & ஜாமீன்தாரர்),** க/பெ ஸ்ரீ ஹரநாத் சம்மன்னா, கதவு எண்.31A, B C N கட்டிடம், தர்மராஜா கோயில் தெரு, பெரியபாளையம் கிராமம், ஊத்துக்கோட்டை தாலுகா, திருவள்ளூர் - 601 102. **(3) திரு. சம்மன்னா சந்திரையா, (பங்குதாரர் & ஜாமீன்தாரர்),** கதவு எண்.31A, B C N கட்டிடம், தர்மராஜா கோயில் தெரு, பெரியபாளையம் கிராமம், ஊத்துக்கோட்டை தாலுகா, திருவள்ளூர் - 601 102. **(4) திரு. சந்திரையா சாந்தி, (பங்குதாரர் & ஜாமீன்தாரர்),** க/பெ ஸ்ரீ சம்மன்னா சந்திரையா, கதவு எண்.31A, B C N கட்டிடம், தர்மராஜா கோயில் தெரு, பெரியபாளையம் கிராமம், ஊத்துக்கோட்டை தாலுகா, திருவள்ளூர் - 601 102. **(5) திரு. ஹரநாத் சம்மன்னா, (ஜாமீன்தாரர் & அடமானதாரர்),** த/பெ ஸ்ரீ சம்மன்னா சந்திரையா, கதவு எண். 31A, B C N கட்டிடம், தர்மராஜா கோயில் தெரு, பெரியபாளையம் கிராமம், ஊத்துக்கோட்டை தாலுகா, திருவள்ளூர் - 601 102.
பொருள் : இந்தியன் வங்கி, மதுரவாயல் கிளையில் உள்ள தங்கள் OCC கணக்கு எண்.7309221216 - சம்பந்தமாக.
நீங்கள் பெற்ற கடனுக்காக **04.05.2026** வரை செலுத்த வேண்டிய நிலுவைத் தொகையான **ரூ.1,89,61,943/- (ரூபாய் ஒரு கோடியே எண்பத்து ஒன்பது லட்சத்து அறுபத்து ஒராயிரத்து தொள்ளாயிரத்து நாற்பத்து மூன்று மட்டும்)** இதில் மேலும் 04.05.2026 முதல் திரும்ப செலுத்தும் தேதி வரை ஒத்துக்கொண்ட மேலதிக வட்டியுடன் சேர்த்து செலுத்த தவறிவிட்டீர்கள்.
04.05.2026 அன்று வரை செலுத்த வேண்டிய தொகையான **ரூ.1,89,61,943/- (ரூபாய் ஒரு கோடியே எண்பத்து ஒன்பது லட்சத்து அறுபத்து ஒராயிரத்து தொள்ளாயிரத்து நாற்பத்து மூன்று மட்டும்)** திரும்ப செலுத்துமாறு **04.05.2026** தேதிவிட்ட மேற்குறிப்பிட்ட SARFAESI சட்டத்தின் கீழ் அறிவிப்பை பதிவுத்தபால் மூலம் வங்கி அனுப்பியது. பதிவுத்தபால் மூலம் அனுப்பப்பட்ட அறிவிப்பு திரும்பி வந்துவிட்டது.
நீங்கள் செலுத்த வேண்டிய கடன் தொகையான **ரூ.1,89,61,943/-** மேலும் 04.05.2026 முதல் மேலதிக வட்டியையும் சேர்த்து கோரிக்கை அறிவிப்பு வெளியான 60 நாட்களுக்குள் செலுத்த வேண்டும். அவ்வாறு தவறும் பட்சத்தில், பிணையைப்புச் சட்ட அமலாக்கத்தை கீழ்கண்ட அட்டவணையில் கொடுக்கப்பட்ட ஈடுபெற்ற ஆஸ்தியை சுவாதீனப்படுத்தும், வங்கிக்கு உள்ள பிற பரிகார வழிமுறைக்கு பாரகமின்றி இந்த அறிவிப்பு வெளியிடப்படுகிறது.
"SARFAESI சட்டம் பிரிவு 13(8) வரத்துகளின் கீழ் அமைக்கப்பட்ட விதிகளின்படி சொத்துக்களை மீட்டுக்கொள்ள உங்களுக்கு உள்ள உரிமையை கவனத்தில் கொள்ளவும்".

அட்டவணை

பிணையமாக அளிக்கப்பட்டுள்ள அடமான சொத்தின் முக்கிய விபரங்கள் பின்வருமாறு :
அடமான சொத்து : எண்.66, தர்மராஜா கோயில் தெரு, பெரியபாளையம் கிராமம், ஊத்துக்கோட்டை தாலுகா, திருவள்ளூர் மாவட்டம் - 601 102-ல் உள்ள 3480 சதுர அடி பரப்பளவு கொண்ட நிலம் மற்றும் கட்டிடத்தின் அனைத்து துண்டுகளும் பகுதிகளும். பழைய சர்வே எண்.112/40B3A, புதிய சர்வே எண்.242/11, பட்டா எண்.847-ன்படி, புதிய சர்வே எண்.242/13-ன் துணை பிரிவில் அடங்கியுள்ளது. எல்லைகள் - வடக்கில் : தர்மராஜா கோயில் தெரு, தெற்கில் : புதிய சர்வே எண்.243/4-ல் உள்ள நிலங்கள், கிழக்கில் : புதிய சர்வே எண்.242/12-ல் உள்ள நிலங்கள், மேற்கில் : மகேஷ் வர்மா அவர்களின் மீதமுள்ள சொத்து. சொத்தின் உரிமையாளர் : திரு ஹரநாத் சம்மன்னா.

தேதி : 06.06.2026 அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி,
இடம் : சென்னை இந்தியன் வங்கி.

நாளை ஸ்ரீ சரபேஸ்வரர் ஏகதின லட்சார்ச்சனை பெருவிழா

சென்னை, ஜூன் 5: அருள்மிகு தேனுபுரீஸ்வரர் திருக்கோயிலில் ஸ்ரீ சரபேஸ்வர் ஏகதின லட்சார்ச்சனை பெருவிழா ஞாயிற்றுக்கிழமை (ஜூன் 7) நடைபெற உள்ளது.

சென்னை மாடம்பாக்கத்தில் உள்ள அருள்மிகு தேனுபுரீஸ்வரர் திருக்கோயிலில் ஞாயிற்றுக்கிழமை (ஜூன் 7) காலை 7 மணிக்கு ஸ்ரீ சரபேஸ்வரர் சிறப்பு யாகம், காலை 9 மணிக்கு சிறப்பு அபிஷேகம் நடைபெற உள்ளது.

தொடர்ந்து காலை 10 மணி முதல் பகல் 12 மணி வரையும், பிற்பகல் 3 மணி முதல் இரவு 8 மணி வரையும் ஸ்ரீ சரபேஸ்வரர் ஏகதின லட்சார்ச்சனை பெருவிழா நடைபெற உள்ளது. பக்தர்கள் ரூ.200 செலுத்தி தங்களது பெயரை பதிவு செய்து பூஜைகளிலும், லட்சார்ச்சனையிலும் கலந்து கொள்ளலாம்.

கொடியேற்றம்...